மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை: திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
இ.ம.எண்.02/2022
அ.வ.எண்.124/2018

1. பழனிசாமி
2. மாணிக்கம் ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிராக/

1. வையாபுரி
2. பழனிசாமி ...எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு கடந்த 06.10.2023 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.C.முத்துசாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.கோபிநாத் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும் ஆகியவற்றை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு காலவரையறைச்சட்டம் பிரிவு 5 ன்கீழ் ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய மனுதாக்கல் செய்வதில் ஏற்பட்ட 725 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக்கொள்ள கோரி மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

1) <u>மனுவின் சுருக்கம்</u> : –

(i) மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக எதிர்மனுதாரர்/வாதி நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து, கடந்த 27.09.2019 ம் தேதியில் ஒருதலைப்பட்ச தீர்ப்பானது. ஆகஸ்ட் இரண்டாவது வாரம் 2019 ல் மனுதாரர்களின் வழக்கறிஞர் இருதய நோயால் பாதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை பெற்று 04.10.2019 ம் தேதியில் மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு, அவர் மருத்துவரின் ஆலோசனைப்படி மே 2020 வரை ஓய்வில் இருந்தார். மேலும் நவம்பர் 2019 ல் கோவிட் பெருந்தொற்றால் அரசாங்கம் ஊரடங்கு அறிவித்ததால் வழக்கறிஞரை சந்திக்க இயலவில்லை. பின்னர் வழக்கறிஞரை சந்தித்த போது தான் கடந்த 27.09.2019 ம்

தேதியில் ஒருதலைப்பட்ச தீர்ப்பான விவரம் மனுதாரர்களுக்கு தெரியவந்தது. மேற்படி காலதாமதம் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. எனவே ஒருதலைப்பட்சமாக பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை ரத்து செய்ய மனுதாக்கல் செய்வதில் ஏற்பட்ட 725 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக்கொள்ள கோரி மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) 2ம் எதிர்மனுதாரால் தாக்கல் செய்யப்பட்டு, 1ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

(i) மனு பொய்யானது. சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. ஆகஸ்ட் இரண்டாவது வாரம் 2019ல் மனுதாரர்களின் வழக்கறிஞர் இருதய நோயால் பாதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை பெற்று 04.10.2019ம் தேதியில் மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு, அவர் மருத்துவரின் ஆலோசனைப்படி மே 2020 வரை ஓய்வில் இருந்தார் என்பதும், மேலும் நவம்பர் 2019ல் கோவிட் பெருந்தொற்றால் அரசாங்கம் ஊரடங்கு அறிவித்ததால் வழக்கறிஞரை சந்திக்க இயலவில்லை என்பதும், பின்னர் வழக்கறிஞரை சந்தித்த போது தான் கடந்த 27.09.2019ம் தேதியில் ஒருதலைப்பட்ச தீர்ப்பான விவரம் மனுதாரர்களுக்கு தெரியவந்தது என்பதும் பொய்யாகும். இதில் கணக்கிட்ட நாட்கள் எத்தனை இவைகள் ஏற்பட்ட காரணம் என்ன? ஏன் நீதிமன்றம் வரவில்லை? நாட்கள் எத்தனை? என்று எவ்வித விளக்கமும் இன்றி வழக்கறிஞருக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டுவிட்டது என்ற ஒரு காரணத்தை மட்டுமே பிரதானப்படுத்தி 22.10.2021ம் தேதியில் பிரமாண தாக்கல் செய்துள்ளார்.

(ii) மனுதாரர்களுக்கு எதிராக 06.07.2019ல் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னரும், 27.09.2019ல் ஒருதலைப்பட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட பின்னரும் என்ன நிகழ்வுகள் ஏற்பட்டது என்பது பற்றி எந்த ஒரு காரணங்களையும் முன்னிலைப்படுத்தவில்லை. மனுதாரர்களுக்கு ஒருதலைப்பட்ச தீர்ப்பாணையிட்ட விபரம் 27.09.2019 அன்றே தெரியும். மேற்படி மனுதாரர்கள் தங்களுக்கு மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டதால் வழக்கை நடத்தவில்லை என பிரமாணப்பத்திரிக்கையை தாக்கல் செய்தனர். பின்னர் நவம்பர் 2019ல் எதிர்மனுதாரர்களை தொந்தரவு

செய்தமையால் கருமலைக்கூடல் காவல்நிலையத்தில் புகார் செய்து விசாரிக்கப்பட்ட போது தீர்ப்பாணையிடப்பட்ட விபரம் அறிந்தனர்.

(iii) பின்னர் 05.12.2019 ல் ஒருதலைப்பட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய வேண்டும் என மனுதாக்கல் செய்தனர். அம்மனு தவறானதால் கடந்த 03.03.2020 ல் 129 நாட்கள் காலதாமதம் ஆகிவிட்டது என்று காலதாமதத்தை மன்னிக்க கோரும் மனுவோடு தாக்கல் செய்தனர். மேலும் ARD.No.1/2021 என்ற மனு எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு அனுமதிக்கப்பட்டது. மனுதாரர்கள் மனுவில் கூறும் காரணம் ஏதும் உண்மையல்ல. முன் நிகழ்வுகளை மறைத்து மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இம்மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள்/வாதிகள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக எதிர்மனுதாரர்/வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து, கடந்த 27.09.2019 ம் தேதியில் ஒருதலைப்பட்ச தீர்ப்பானது என்றும், ஆகஸ்ட் இரண்டாவது வாரம் 2019 ல் மனுதாரர்களின் வழக்கறிஞர் இருதய நோயால் பாதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை பெற்று 04.10.2019 ம் தேதியில் மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு, அவர் மருத்துவரின் ஆலோசனைப்படி மே 2020 வரை ஓய்வில் இருந்தார் என்றும், மேலும் நவம்பர் 2019 ல் கோவிட் பெருந்தொற்றால் அரசாங்கம் ஊரடங்கு அறிவித்ததால் வழக்கறிஞரை சந்திக்க இயலவில்லை என்றும், வழக்கறிஞரை சந்தித்த போது தான் கடந்த

27.09.2019 ம் தேதியில் ஒருதலைப்பட்ச தீர்ப்பான விவரம் மனுதாரர்களுக்கு தெரியவந்தது என்றும், மேற்படி காலதாமதம் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், எனவே ஒருதலைப்பட்சமாக பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை ரத்து செய்ய மனுதாக்கல் செய்வதில் ஏற்பட்ட 725 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக்கொள்ள கோரி மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மனு தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞரை சந்தித்த போது தான் கடந்த 27.09.2019 ம் தேதியில் ஒருதலைப்பட்ச தீர்ப்பான விவரம் மனுதாரர்களுக்கு தெரியவந்தது என்பதும் பொய் என்றும், இதில் கணக்கிட்ட நாட்கள் எத்தனை இவைகள் ஏற்பட்ட காரணம் என்ன? ஏன் நீதிமன்றம் வரவில்லை? நாட்கள் எத்தனை? என்று எவ்வித விளக்கமும் இன்றி வழக்கறிஞருக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டுவிட்டது என்ற ஒரு காரணத்தை மட்டுமே பிரதானப்படுத்தி 22.10.2021 ம் தேதியில் பிரமாண தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர்களுக்கு ஒருதலைப்பட்ச தீர்ப்பாணையிட்ட விபரம் 27.09.2019 அன்றே தெரியும் என்றும், மேற்படி மனுதாரர்கள் தங்களுக்கு மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டதால் வழக்கை நடத்தவில்லை என பிரமாணப்பத்திரிக்கையை தாக்கல் செய்தனர் என்றும், பின்னர் நவம்பர் 2019 ல் எதிர்மனுதாரர்களை தொந்தரவு செய்தமையால் கருமலைக்கூடல் காவல்நிலையத்தில் புகார் செய்து விசாரிக்கப்பட்ட போது தீர்ப்பாணையிடப்பட்ட விபரம் அறிந்தனர் என்றும், எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கூறிள்ளது தெரிய வருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக எதிர்மனுதாரர்கள்/வாதிகள் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது. மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்களுக்கு மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டதாலும், மனுதாரர்களின் வழக்கறிஞருக்கு இதய நோய் ஏற்பட்டு அறுவை சிகிச்சை செய்து, அவர் ஓய்வில் இருந்ததாலும், கோவிட் பெருந்தொற்று காரணமாகவும், உரிய நேரத்தில் மனுதாரர்கள் தங்களது வழக்கறிஞரை சந்திக்க இயலவில்லை என்பதால் தங்களுக்கு எதிராக

பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவு மற்றும் தீர்ப்பாணை குறித்து தங்களுக்கு தெரியவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொள்கையில், 06.07.2019 ம் தேதியில் நீதிமன்றத்தில் ஆஜராகாததற்கு மனுதாரர்களால் முன்வைக்கப்படும் காரணம் ஏற்கத்தக்கது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(iv) அதே சமயத்தில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கடந்த 05.12.2019 ம் தேதியில் ஒருதலைப்பட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய வேண்டும் என மனுதாரர்கள் தரப்பில் ஏற்கனவே ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டதாகவும், அம்மனுவில் தவறுகள் உள்ளதால் மேற்படி மனு திருப்பப்பட்டு, தவறுகளை நிவர்த்தி செய்து மீண்டும் சமர்ப்பிக்க 129 நாட்கள் காலதாமதம் ஆனதால் மேற்படி காலதாமதத்தை மன்னிக்க கோரி 03.03.2020 ம் தேதியில் மனுதாரர்களால் மனுதாக்கல் செய்யப்பட்டதாகவும், அதேபோல் மேற்படி வழக்கில் எதிர்மனுதாரர்கள் தங்களது ஆவணங்களை திரும்ப பெற கோரி தாக்கல் செய்த ARD.No.1/2021 என்ற மனுவில் மனுதாரர்களுக்கு அழைப்பாணை அனுப்பி அவர்கள் பெற்றுக் கொண்டும் ஆஜராகவில்லை என்றும், மேற்படி நிகழ்வுகளை மறைத்து மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் கூறியுள்ளதை கருத்தில் கொள்கையில், எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி ஒருதலைப்பட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய இந்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தது தொடர்பாகவோ, மேலும் மேற்படி மனு இந்நீதிமன்றத்தால் திருப்பப்பட்டது தொடர்பாகவோ, மேலும் ARD.No.1/2021 ல் மனுதாரர்களுக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டது தொடர்பாகவோ எவ்வித ஆவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை என தெரியவருகிறது.

(v) இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களை கவனமாக பரிசீலனை செய்கையிலும், இவ்வழக்கினை தகுதிப்பாட்டின் அடிப்படையில் தீர்மானிப்பது இருதரப்பினருக்கும் உகந்தது என்பதாலும், மனுதாரர்கள் இவ்வழக்கில் தங்களின் எதிர்வாதத்தை முன்வைக்க ஒரு வாய்ப்பு வழங்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. ஆனால் மனுதாரர்கள் 725 நாட்கள் காலதாமதமாக இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதால் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்டுள்ள காலவிரயத்தை ஈடு

செய்யும் வகையில் மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு ரூ.2500/− செலவுத்தொகை செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது.

முடிவாக மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு ரூ.2500/−செலவுத்தொகையாக 15.11.2023 க்குள் அளிக்கும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. அழைக்க 15.11.2023.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/−திரு.ஆர்.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:− இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:− இல்லை

ஒப்பம்/−திரு.ஆர்.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.